REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 11உ செவ்வாய் (27—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 12உ புதன் (28—9—55) [இதழ் 90

## அகதிகளுக்கு 15 இலட்சம் வீடுகள்

### ரூ. 55 கோடியில் கட்டப்பட்டன

புதுடில்லி, செப். 26—

'சுமார் ரூ. 55 கோடி செலவில் இந்தியாவெங்கணும் அகதிகளின் குடியிருப்பு வசதிக்காக 15 இலட்சம் வீடுகளை இந்திய சர்க்கார் கட்டியிருக்கின்றனர்,"

—என்று அகதி இலாகா உதவி மந்திரி சே. கே. பான்ஸ்லே மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

# 'போரிட்டுச் சாகவும் தயங்க மாட்டோம்!'

## பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கை பற்றி மாஸ்டர் தாராசிங் முழக்கம்

ஜலந்தர், செப். 25—

"பஞ்சாப் மொழிவழி மாநிலம் அமைக்க வேண்டும்—என்ற தங்கள் கோரிக்கையை, சீக்கியர்கள் எந்தக் காரணத்தாலும் கைவிடமாட்டார்கள்; இந்த கோரிக்கையைப் பெறுவதற்காக—தேவையானல், அவர்கள் 'செய் அல்லது செத்து மடி' என்ற ரீதியில் போராடவும் தயங்கமாட்டார்கள்,"

என்று, அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் கூட்டமொன்றில் முழக்கமிட்டிருக்கிறார்

மேலும் அவர் பேசுகையில், "நாங்கள் கோரும் மாநிலத்தில் பஞ்சாப்—பெப்சு—இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள பஞ்சாபி மொழி வழங்கும் பகுதிகள் எல்லாம் இடம் பெற்றிருக்க வேண்டும்," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

'வெளி நாட்டவர் சிலரின் தூண்டுதலின் பேரில்தான் சீக்கியர் கிளர்ச்சியில் ஈடுபடுகின்றனர்," என்று கூறப்படும் குற்றச்சாட்டை அவர் மறுத்தார்.

"இந்தியாவை எந்த வெளி நாட்டவரேனும், இப்போது தாக்குவார்களேயானல், அந்தத் தாக்குதலை எதிர்த்துப் போரிடுவதற்காக, எங்கள் இயக்கத்தை ஒத்திவைத்துவிட்டு, போர்க்களத்தில் குதிக்கவும் அகாலிகள் தயாராயிருக்கின்றனர்," என்றும் மாஸ்டர் தாராசிங் குறிப்பிட்டிருக்கிறார்.

## நவம்பர் 18....!

### இந்தியாவுக்குக் குருஷ்சேவ், புல்கானின் வருகை தரும் நாள்

புதுடில்லி, செப். 26—

ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதல் செயலாளர் குருஷ்சேவ் பிரதமர் புல்கானினுடன் இந்தியாவுக்கு வருகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போதுள்ள ஏற்பாட்டின்படி அவர்கள், நவம்பர் 18-ந் தேதியன்று டில்லிக்கு வருவரென்றும், 21-ந் தேதி முதல் நாடு முழுவதிலும் சுற்றுப்பயணம் துவங்குவரெனவும் கூறப்படுகிறது இந்தியாவில் அவர்கள் இரு வாரங்களுக்குத் தங்கக் கூடுமாம்.

மக்கள் சபையின் அடுத்த கூட்டத் தொடர் நவ. 21-ந் தேதியன்று ஆரம்பமாகுமென்றும், அன்றையத்தினம் ரஷ்யப் பிரதமர் புல்கானின் மக்கள் சபையில் உரை ஆற்றுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

அதே நாளன்று, பார்லிமெண்டரி விவகாரக் காரியதரிசி சத்திய நாராயண் சின்ஹ, புல்கானினுக்கும், அவருடைய சகாக்களுக்கும் விருந்தொன்று அளிப்பாராம்.

## டால்மியா ஜாமீனில் விடுதலை

புதுடில்லி, செப். 26—

நேற்று கைது செய்து காவலில் வைக்கப்பட்ட இராமகிருஷ்ண டால்மியா இன்று ஜாமீனில் வெளிவிடப்பட்டிருக்கிறார்.

ரூ. 2,22,00,000 பெறுமான சர்க்கார் பத்திரங்களை மோசடி செய்ததாக அவர் கைது செய்யப்பட்டார்.

இதனை ஒட்டி, இன்ஷ்யூரன்ஸ் சட்டப்படி, பங்குதாரர்களின் நன்மை கருதி, பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் நிர்வாகியாக இந்திய சர்க்கார், தனது நிதி இலாகாவில் இன்ஷ்யூரன்ஸ் கட்டுப்பாடு அதிகாரியாக இருக்கும் எம். ஜே. ராவ் என்பவரை நியமித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

### குறிப்பிட்ட அளவுக்கு ஆயுதங்கள் விற்பனை?

ரொக்க விலையில், எகிப்துக்கு ஒரு குறிப்பிட்ட அளவில் ஆயுதங்களை விற்பதற்குக் கொள்கை அளவில் அமெரிக்கா ஒப்புக்கொண்டிருக்கிறதாம்!

## கைத்தறியும் ஆலைத் துணியும்

### பண்டித நேரு கருத்து

புதுடில்லி, செப். 26—

"கைத்தறிகளையே நாம் அதிகமாக வற்புறுத்தக் கூடாது; கைத்தறித் துணிக்கு மட்டும் ஊக்கம் அளித்து, மில் துணிகளை வெறுத்துவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகி, சில அடிப்படைப் பிரச்சினைகள் எழக்கூடும்; இயந்திரங்கள் என்பதுதான் என்ன? மனிதக் கரங்களின் விஸ்தரிப்பேயாகும்; இயந்திரங்கள், மனிதக் கரங்களுக்கு அதிக சக்தியைத் தருகிறது—கையால் வேலை செய்யும் நம்முடைய சக்தியை அதிகரிக்கிறது,"

என்று, விவாதமொன்றில், பிரதமர் நேரு தெரிவித்த கருத்துக்களை பொருளாதார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

## 'அகாலிதளத்தவர் கோரிக்கையை தளர்த்தக்கூடாது'

### பெப்சு முன்னுள் முதன் மந்திரி எச்சரிக்கை

பாடியாலா, செப். 24—

"'பஞ்சாபி மொழிவழி மாநிலம்' என்ற கோரிக்கையினின்றும் சிறிதேனும் அகாலிதளத்தவர் விட்டுக்கொடுத்தால், தாமும், தனது சகாக்களும், அகாலி தளத்தவருடன் கொண்டுள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்ள வேண்டிவரும்,"

என்று, பெப்சு முன்னுள் முதன் மந்திரி ஜியான்சிங் ரேர்வாலா பத்திரிகையாளரிடம் பேசியிருக்கிறார்.

வரும் அக்டோபர் திங்களில் பெப்சு மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதில் அக்கரை கொண்டோரின் மாநாடு ஒன்று நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தாராம்.

"பெப்சு மாநிலத்தை வேறெந்த மாநிலத்துடனும் இணைப்பதை எதிர்த்துப் போராடுவதற்காக ஒரு நடவடிக்கைத் திட்டத்தை மாநாடு வகுக்கும்,"

என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்த முடிவு

### மக்கள் சபையில் ஒருமனதாக மசோதா நிறைவேற்றம்

புதுடில்லி, செப். 26—

பரிசுப் போட்டிகளை (குறுக்கெழுத்துப் போட்டிகள் போன்றவை) கட்டுப்படுத்தும் மசோதா ஒன்றை, மக்கள் சபை, ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறது.

இந்திய உள்நாட்டு மந்திரி பண்டித வல்லப பந்த் கொண்டு வந்த அந்த மசோதா விவாதிக்கப்பட்டபோது, ஆளும் கட்சியினரும், எதிர்க் கட்சியினரும், மசோதாவின் அவசியத்தை வலியுறுத்தினர்; சில உறுப்பினர்கள், 'இந்தப் பரிசுப் போட்டிகளை முழுவதுமாக ஒழித்துவிட வேண்டும்,' என்று கோரினர்.

மசோதாவின்படி, 'பரிசுத் தொகை ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது' என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், 'பரிசுப் போட்டியில் ஒருவர் இத்தனை கலங்கள்தான் பதியலாம் என்று நிர்ணயம் செய்ய வேண்டும்,' என்று கோரும் திருத்தம் ஒன்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த மசோதாவைக் கொண்டு வந்து பண்டித பந்த் பேசுகையில் சொன்னார்:—

"இந்தக் குறுக்கெழுத்துப் போட்டிகள் எல்லாம், திட்டமிட்டுச் செய்யப்படும் மோசடிகளாகும்; திடீரெனச் சீக்கிரமாகப் பணக்காரர்களாகிவிட வேண்டுமென்ற ஏழை மக்களின் தவிர்க்க முடியாத—இயற்கையான மனோபாவத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பணம் திரட்டுவதற்குரிய ஒரு வழியாக இந்தக் குறுக்கெழுத்துப் போட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

"இந்தப் போட்டிகளினுல் ஒரிரண்டு நாட்களில் பணக்காரர்களாகிவிடலாம் என்றெண்ணி ஏழை மக்களும், நடுத்தர மக்களும், மாணவர்களும் தங்கள் வாழ்வைப் பாழடித்துக் கொள்கின்றனர்; அவர்களைக் காப்பாற்ற வேண்டியது சர்க்காரின் பொறுப்பாகிறது."

தொடர்ந்து பேசிய அவர், குறுக்கெழுத்துப் போட்டிகள் சமீப காலத்தில், மிக முன்னணிக்கு வந்துவிட்ட கொடுமை என்று குறிப்பிட்டதோடு, அவை பற்றிய புள்ளிவிவரங்களையும் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் எல்லா மாநிலங்களும் இது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டனவென்றும், அவைகள் இந்த நடவடிக்கையை வரவேற்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

'மசோதாவை ஒரு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்குவிட வேண்டும்' என்ற திருத்தம் தோல்வியுற்றது.

## 33 இந்தியர் கொலை!

### கெனியா நெருக்கடி எதிரொலி?

புதுடில்லி, செப். 26—

"1952 அக்டோபரில் கெனியாவில் நெருக்கடி ஆரம்பமான பின்னர், இதுவரையில் 33 இந்தியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலையானார்!

கராச்சி, செப். 26—

எவ்விதமான நிபந்தனையுமின்றி, கான் அப்துல் கபார்கான், மாச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு விட்டாராம்!

பலுசிஸ்தானில் நுழைந்ததற்காகச் சில நாட்களுக்கு முன்னர் அங்கு அவர் கைது செய்யப்பட்டது நினைவிலிருக்கலாம்.

தன்னுடன் கைது செய்யப்பட்ட இரு செஞ்சட்டைத் தலைவர்களுடன் அவர், பெஷாவருக்குப் புறப்பட்டுச் சென்றாராம்.

## சடங்குகளுக்கு ரூ.700 கோடி செலவு

### மட்டுப்படுத்தி சேமிப்புச் செய்ய வழிகள் என்ன?

#### வீண் விரயத்தைத் தடுக்கத் தனிக் குழு நியமனம்

புதுடில்லி, செப். 26—

"திருமணங்கள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், வைபவங்கள் இவற்றிற்காக இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் ரூ. 700 கோடி வரையில் செலவிடப்படுகிறது; இந்த வைபவங்களுக்காக விரயமாக்கப்படும் இந்தத் தொகையைக் குறைத்தால், தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மூலதனம் தரும் வகையில் மிச்சப்படுத்திப் பயன் பெற முடியும்; சுமார் ரூ. 250 முதல் ரூ. 300 கோடி வரையில் அவ்வாறு மிச்சப்படுத்த முடியும்; இந்தக் காரியத்தைச் செய்ய காங்கிரசார் முன்வர வேண்டும்,"

என்று, திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா தெரிவித்திருக்கிறார்.

திருமணம் போன்ற வைபவங்களின் செலவை மட்டுப்படுத்த வழிவகை காண்பதற்காக, பு. என். பர்மன் என்பார் தலைமையில் ஒரு உப குழுவும் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

## 'இரத்தம் சிந்தாமல் மலேயாவிற்குச் சுதந்திரம்'

### மலேயா முதலமைச்சர் நம்பிக்கை

கோலா காங்கூர் (வடக்கு மலேயா) செப். 25—

"மலேயா காலனி ஆட்சியை ஒழித்தாக வேண்டும்—ஆனல், இரத்தக்களறி ஏற்படக் கூடாது;

"தென் கிழக்கு ஆசியாவில் மலேயா மட்டுமே இன்னும் காலனி ஆதிக்கத்திலிருக்கிறது;

"மலேயாவிற்கு சுதந்திரம் வழங்குவதாகப் பிரிட்டன் உறுதிமொழி தந்திருக்கிறது; நாம், நிச்சயம், பிரிட்டன் அந்த உறுதிமொழியை நிறைவேற்றுமாறு கட்டுப்படுத்துவோம்,"

என்று, முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"முக்கூட்டுக் கட்சியின் பிரதிநிதிகளும், ஆட்சிப் பொறுப்பு விரும்புபவர்களும், வரும் 1956 ஜனவரி 28-ந் தேதி லண்டன் செல்லுகிறோம் அங்கு நாங்கள் நடத்தும் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமானவையாயிருந்தால் நீண்ட நாட்கள் லண்டனில் தங்குவோம்; ஆனல், தோற்றுவிட்டால், மறுதினமே தாயகம் திரும்பிவிடுவோம்."

மேலும் ரெஹ்மான், ஆஸ்திரேலியத் துருப்புக்கூட மலேயாவின் நெருக்கடி நிலைச் சட்டம் ஒழிவதில் கவனமுடனிருக்கிறார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

## கோவா பிரச்சினையில் மத்தியஸ்தமா?

### பிரதமர் நேரு மறுக்கிறார்

புதுடில்லி, செப். 26—

"கோவாவில், இந்தியாவின் நலன்களைக் கவனித்துக் கொள்ளுமாறு இந்தியாவுடன் நேச முறையில் உள்ள எந்த வல்லரசையாவது கேட்கலாமென்ற இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளது," என்று பிரதமர் நேரு, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோவா தகராறில், இந்தியாவுக்கும்—போர்ச்சுகீசிய நாட்டுக்குமிடையே சமரசம் செய்வதற்கு பிரிட்டன் முன் வந்திருக்கிறது என்ற தகவலையும் அவர் [illegible]

நம் நாடு
தி.மு.க.தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—9—'55 செவ்வாய்

# பொறுப்பற்றவர்கள்!

★

இந்தியப் பாராளுமன்றத்தில் 499 உறுப்பினர்கள் இருக்கின்றனர்; 'ராஜ்யங்கள் சபை' என்றழைக்கப்படும் மன்றத்தில் 219 பேர்கள் இருக்கின்றனர்.

இவர்கள் எல்லோருக்கும் மாதச் சம்பளம் நானூறு ரூபாய். மன்றக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களில் டில்லியில் தங்குவதற்கான 'படி' தினந்தோறும் ரூ. 21 தரப்படுகிறது.

இதுமட்டுமா? இந்தியா முழுவதும் இரயிலில், சர்க்கார் செலவில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய அனுமதியும், வசதியும் செய்து தரப்பட்டிருக்கின்றன.

இத்தனை வசதிகளையும் பெறும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மன்றத்தின் நடவடிக்கைகளில் எத்துணை அக்கறை காட்டுகின்றனர் என்பதை, இவர்களுக்கு இந்த வசதிகளை தங்கள் வரிப் பணத்தின் மூலம் கொடுக்கும் வாக்காளர் பெருமக்கள்—நாட்டவர் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

ஜனநாயகம், மக்களுக்கு உண்மையில் பலன் தரும ஒரு அரசு முறையாக விளங்க வேண்டுமானால், அந்த அரசினை நிர்மாணிக்கிற அதிகாரம் பெற்றுள்ள மக்கள், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை 'சாவடி'க்குச் சென்று 'வாக்குப் பதிவு' செய்துவிடுவதுடன் நின்றுவிடக் கூடாது; தாங்கள் வாக்களித்த நபரின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்க வேண்டுவது அவசியம்.

நூற்றுக்கு சுமார் எண்பது பேர்களுக்கும் அதிகமானோர் —'கல்வி அறிவு பெற்றவர்கள் அல்லர்' என்ற நிலையில் உள்ள மக்கள் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களையே புரிந்துகொள்ள முடியாமல், தங்களின் விலைமதிப்பில்லா 'வாக்கு'களை சில நேரங்களில் விலைக்கு விற்றுவிடுகிற ஆபத்தான நிலை நிலவும்போது, எப்படி அந்த மக்கள், தாங்கள் வாக்களித்த நபரின் நடவடிக்கைகளில் கவனஞ்செலுத்தப் போகின்றனர் என்ற ஐயப்பாடும் எழத்தான் செய்கிறது.

ஆனால், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்புடையோர், மக்களின் நலனுக்கு உண்மையில் பாடுபடும் பெருமதி கொண்ட கட்சியினர் எல்லாரும், நாட்டு மக்களுக்குப் போதுமான அரசியல் விழிப்புணர்வை ஊட்டவும், ஓரளவேனும் பொது அறிவை மக்கள் பெறவுமாகப் பாடுபட வேண்டியது நீங்காக் கடமையாகும்.

அந்த வகையில் நாம், இப்போது மக்கள் சபையிலும், மாநில சட்ட மன்றங்களிலும் வீற்றிருக்கும் உறுப்பினர்கள் பலரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளை அவ்வப்போது, நமது ஆற்றலுக்கொப்ப, மக்களிடத்தில் எடுத்துக் கூறி மக்களை விழிப்புடன் இருக்குமாறு கூறிவந்திருக்கிறோம்.

கடந்த கிழமையில், பொதுக் கணக்குப் பரிசீலனைக் குழுவின் அறிக்கை குறித்த விவாதம் மக்கள் சபையில் நடைபெற்றபோது, 25 உறுப்பினர்கள்கூட மன்றத்தில் இல்லாமலிருந்திருக்கின்றனர்; மன்றத் தலைவர், உறுப்பினர்களின் பொறுப்பற்ற தன்மையைச் சுட்டிக்காட்டி கடிந்துகொண்டிருக்கிறார்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை இந்தியப் பேரரசின் நிர்வாக ஊழலைப் 'படம்' பிடித்துக் காட்டுவதாய் அமைந்திருந்தது. அந்த அறிக்கையில்தான், 'சமாதானப் புரு'வாம் பண்டித நேருவின் தலைமையில் உள்ள ஆட்சிபீடம், பொது மக்கள் வரிப் பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாயை பாழடித்த சோகச் சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்தன. ஊழல் நிறைந்த இந்திய சர்க்காரின் நிர்வாகம் பற்றிய விமரிசனம், மன்றத்தில் நடைபெறும்போது, 499 பேர்களில் 25 பேர்கள்கூட மன்றத்தில் இருக்கவில்லை; இவர்கள் எல்லாம் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற முத்திரையுடையவர்கள்; இந்தப் பொறுப்பற்றப் பிரதிநிதிகளுக்குத் தீனி போடுவதற்காக, 1954—55-ம் ஆண்டில் செலவான தொகை ஒரு கோடியே முப்பத்துநாலு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய்; 1955-56-ம் ஆண்டில் செலவாகவிருப்பது, ஒரு கோடியே எழுபத்து மூன்று லட்சத்து ஐம்பத்து மூவாயிரம் ரூபாய்.

பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து ஆண்டொன்றுக்குக் கோடிக்கணக்கான ரூபாயை விழுங்கும் மக்கள் சபையில் உறுப்பினர்களாயிருப்போர், பொது மக்களின் பணம் ஆட்சியினரால் பாழடிக்கப்பட்டது பற்றிய விவாதத்தின் போதுகூட சபையில் இருக்கவில்லை என்றால், இந்த உறுப்பினர்களின் செயலை என்னவென்று கூறுவது — 'பொது மக்களுக்கு இழைக்கும் துரோகம்' என்று கூறுவதைத் தவிர?

மக்கள் சபையில் பெரும்பான்மை இடத்தைப் பிடித்துக்கொண்டு ஆட்சியில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியினர் மட்டுமின்றி, மக்கள் சபையில் வீற்றிருக்கும் இதர கட்சியினரும் — சுயேச்சைகளும்கூடத்தான் — பொது மக்களின் கண்காணிப்பிற்கு உரியவர்கள். அடுத்துவரும் தேர்தல்களில், வாக்காளர் பெருமக்கள், இந்தப் பொறுப்பற்ற பிரதிநிதிகளுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டுவது அவசியம்; இன்றேல் யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட கதையாகத்தான் முடியும்— இந்த நாட்டவரின் எதிர்காலம்!

# சென்னை சட்டசபை: கேள்வி நேரம்

### முன்னெச்சரிக்கையுடன் இருக்கின்றனராம்!

"சென்னை மாகிலத்தில், நெல் விலை ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறையாமல் பார்த்துக் கொள்ளுவதற்கு எல்லாவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் சர்க்கார் மேற்கொண்டு வருகிறது; அவசியமேற்படும்போது தக்க பாதுகாப்பு அளிக்கப்படும்," என்று விவசாய அமைச்சர் கூறியுள்ளார்.

### இறக்குமதித் திட்டம் கைவிடப்பட்டதாம்!

மலிவான விலையில், அமெரிக்காவிலிருந்து நெய் இறக்குமதி செய்யும் திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளதாக, மத்திய ஆட்சியிடமிருந்து சென்னை சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### மேற்கொண்டு நடவடிக்கை அவசியமில்லையாம்!

சேலம் நகரகூட்டுறவுப் பண்டக சாலையின் நடவடிக்கைகள் ஒழுங்கினமாக இருப்பதாக சர்க்காருக்குப் புகார் கிடைத்தது உண்மைதான் என்றும், உதவி ரிஜிஸ்திரார் இப்பிரச்சினை பற்றி விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுத்து வருவதால், அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமில்லை என்றும் சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

### ஆலோசனையில் இருக்கிறதாம்!

"சென்னை மாகிலத்தில் உள்ள கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் ஆண்டுத் தேர்வுகளை டிசம்பர் மாதத்திலேயே நடத்தும் திட்டம் சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகிறது," என்று கல்வி மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

### பரிசீலனை செய்கின்றனர்?

"சென்னை மாகிலத்தில் புதிதாக ஏற்படுத்தப்படும் நெல் குத்தும் மில்களுக்கு 'லைசென்ஸ்' வழங்கக்கூடாதென சர்க்கார் இன்னும் முடிவு செய்யவில்லை; இது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது," என்று விவசாய மந்திரி பதிலளித்துள்ளார்.

### கள்ளச் சாராய வழக்கு: 9,353 பேர்கள் கைது

"1954-ம் ஆண்டில், மதுவிலக்கு அதிகாரிகள், சென்னை நகரில் 1,264 தடவைகள் சோதனையிட்டனர்; கள்ளச் சாராய வழக்கு சம்பந்தமாக மொத்தம் 9,353 பேர்கள் கைது செய்யப்பட்டனர்," என்று, மதுவிலக்கு மந்திரி பதிலளித்தார்.

### படிப்படியாக குறைப்பதற்கு யோசிக்கிறார்களாம்!

"கையால்இழுக்கப்படும் ரிக்ஷாக்களை உடனடியாக ஒழிப்பதற்கான உத்தேசம் சர்க்காருக்குக் கிடையாது; படிப்படியாக அவைகளைக் குறைத்து, அவைகளை இழுப்பவர்களுக்கு 'மாற்று வேலை' கொடுப்பது பற்றி, சர்க்கார் யோசிக்கிறது; சென்னையில் மொத்தம் 3,750 ரிக்ஷாக்களும், 3,591 ரிக்ஷா இழுப்பவர்களும் உள்ளனர்," என்று, போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### 'உல்லாசமாகச் செல்வதற்கு அனுமதிக்க இயலாது'

"1954 செப்டம்பர் திங்களுக்குப் பின்னர், 1,000 சைக்கிள் ரிக்ஷாக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன; இவைகளில், இருவர் ஏறிச் செல்வதைத் தடுப்பதற்காக, உட்காரும் இடம் குறைக்கப்பட்டது; பிணிவாய்ப்பட்டவர்கள், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படும்போது, துணைக்காக மற்றொரு நபரை ஏற்றிச்செல்வதற்கு மட்டும் சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறது; ஆனால், தம்பதிகள் உல்லாசமாக சைக்கிள் ரிக்ஷாவில் ஏறிச் செல்வதற்கு அனுமதிக்க இயலாது," என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அநீதிகளை எதிர்க்க ஆர்ப்பாட்டமாம்!

### அதிகாரத்தைக் கைப்பற்ற ஏழாண்டுத் திட்டமாம்

சில அடிப்படைக் கோரிக்கைகளை எழுப்பி, அக். 18-ந் தேதியன்று நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு, டாக்டர் லோகியாவின் தலைமையில் அமைக்கப்படும் புதிய சோஷலிஸ்டு கட்சி திட்டமிட்டுள்ளதாம்!

'இயக்கத்தின் மீது அடக்கு முறைகள் கையாளப்பட்டால், அதைத் திருப்பி எதிர்ப்போம்,' என்று டாக்டர் லோகியா கூறியுள்ளார்.

அநீதிகளை எதிர்த்து நடைபெறும் ஒரு 'தேசிய இயக்கத்'தின் ஆரம்பமாகக் கட்சியின் ஆர்ப்பாட்டங்கள் இருக்குமாம்.

இந்த இயக்கத்தைத் தவிர, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஏழாண்டுத் திட்டமொன்றை கட்சியின் முன், டாக்டர் லோகியா வைப்பாராம்!

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு, மன உறுதி தேவைப்படுவதால், கட்சியினரின் மனதைப் பக்குவப்படுத்தும் முறையில் பயிற்சி அளிக்கப்படுமாம்.

# கழகத் தோழர் மீது வழக்கு

### தள்ளுபடி செய்யப்பட்டது

12—6—55ல், திருப்பரங்குன்றம் திராவிடர் பகுத்தறிவு மன்ற (தி. மு. கழகத்தின் உட்கிளை) உறுப்பினர்கள், அவ்வூர் சந்திரா பாளையத்தில் தி. மு. கழகக் கொடியை ஏற்றப் போகும் பொழுது, சில இளைஞர் காங்கிரஸ் தோழர்கள் கழகத் தோழர்களைத் தாக்கியும், கொடியை ஏற்றவிடாமல் தடுத்தும், அதன் பொருட்டு ஏற்பட்ட சச்சரவில் கழகத் தோழர் வெ. மாரிமுத்து என்பவர் மீது இ. பி. கோ. 326-வது விதிப்படி வழக்கும் தொடர்ந்துவிட்டனர் வழக்கை விசாரித்த நீதிமன்றம் 21—9—55-ல், அதனைத் தள்ளுபடி செய்துவிட்டது. மேற்படி வழக்கில் வழக்கறிஞர் திரு பி. எஸ் இராம சுப்பிரமணியம் கழகத் தோழர்கள் சார்பில் வாதாடினார். (ந. தி.)

# சாய ஆராய்ச்சி சோதனைக்கூடம்

### சென்னையில் நிறுவப்படும்

சென்னை, செப். 26—

அடையாறில் கலா க்ஷேத்திரத்தில் சாய ஆராய்ச்சி சோதனைக் கூடம் நிறுவும் திட்டம் அடுத்த மாதத்தில் (அக்டோபர்) அமுலுக்கு வருமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

இத்திட்டத்திற்கு அகில இந்திய கைத்தொழில் கழகம் ரூ 41,000-க்கு மேலாக மானியமாக அனுமதித்திருக்கிறது.

உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிற தனி ரக இந்திய சாயங்களை ஒரே 'தர'முடையதாகச் செய்ய வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

கைத்தறி நெசவு நிலையமொன்றை நிறுவுகிற மற்றொரு திட்டத்திற்கு மானியமாகவும், கடனாகவும், ரூ 1,48,000 கைத்தொழில் கழகம் அனுமதித்திருக்கிறது; இது அடுத்த ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும்.

சாய ஆராய்ச்சி சோதனைக்கூடத்தின் பலன்களைக் கைத்தறி நெசவுக்குப் பயன்படுத்திப் பார்ப்பதே இரண்டாவது திட்டத்தின் நோக்கம்.

சென்ற ஆண்டில், மில்களில், 500 கோடி கெஜம் துணி உற்பத்திச் செய்யப்பட்டதாம்; கைத்தறிகள், விசைத்தறிகள் மூலம் 160 கோடி கெஜம் துணி உற்பத்தி ஆயிற்றாம்.

# பெரோன் தப்பி ஓட்ட

### பாதுகாப்புத் தரப்படுமாம்!

பியூனஸ் அயர்ஸ், செப். 24—

தோற்கடிக்கப்பட்ட அர்ஜெண்டைனா முன்னாள் குடியரசுத் தலைவர் பெரோன், பராகுவே படகு ஒன்றில் இருப்பதாகவும், அவர் பத்திரமாக நாட்டைவிட்டு வெளியேறிவிட எல்லா உதவிகளும் செய்யப்படும் என்றும் அர்ஜெண்டைனாவில் புதிதாக அமைந்துள்ள சர்க்காரின் தலைவரான ஈடுவார்டோ லொனார்டி தெரிவித்திருக்கிறார்.

### அமெரிக்கா அங்கீகாரம்

தளபதி லொனார்டி தலைமையில் நிறுவப்பட்டுள்ள புதிய அர்ஜெண்டைனா சர்க்காரை அமெரிக்கா அங்கீகரித்துவிட்டதாம்!

# 'பொதுத் தேர்தலுக்கு தயாராகுக!'

திடீரென்று நடைபெறப் போகும் பொதுத் தேர்தலுக்குத் தயாராக இருக்கும்படி இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, கட்சிக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

# 'காஷ்மீரை விடுவிக்க நடவடிக்கை திட்டம்'

லாகூர், செப் 24—

காஷ்மீர் முஸ்லிம் மாநாட்டுத் தலைவரும், ஆசாத் காஷ்மீர் சர்க்கார் முன்னாள் தலைவருமான சர்தார் முகம்மது இப்ராகிம் என்பார், காஷ்மீர் தகராறைத் தீர்ப்பதற்கு தனது கட்சியிடம் நடவடிக்கைத் திட்டம் ஒன்று இருப்பதாக இராவல்பிண்டியில் தெரிவித்திருக்கிறார்.

"காஷ்மீர் விவகாரத்திற்காகக் கூட்டப்படும் அகில பாகிஸ்தான் மாநாடு தனது திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமானால், பலாத்காரமின்றியே காஷ்மீரை விடுவித்துவிட முடியும்," என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறாராம்.

* * *

### காஷ்மீர் விடுதலைக்கு சத்தியாக்கிரகம்

### பாகிஸ்தானில் கண்டனம்

கராச்சி, செப். 24—

'காஷ்மீர் பாகிஸ்தானுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, சில பாகிஸ்தானியர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவது தவறானது,' என்று அல்லாமா மஷ்ருகி என்ற காக்சர் தலைவர் கண்டித்திருக்கிறார்.

### பாகிஸ்தான் கல் உப்பு இந்தியாவுக்கு ஏற்றுமதி

1955 செப்டம்பர்–1956 ஆகஸ்டுக்கு இடையேயுள்ள காலத்தில், ரூ. 7,75,000 பெறுமானமுள்ள 10 இலட்சம் மணங்கு கல் உப்பை, இந்தியாவுக்குப் பாகிஸ்தான் ஏற்றுமதி செய்யுமென்றும், அளவுக் கட்டுப்பாடின்றி ஏற்றுமதி அனுமதிக்கப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

# 999 கல்வி நிலையம்

### 62,000 பேர்களுக்குத் தொழில் நுணுக்கப் பயிற்சி

புதுடில்லி, செப். 23—

இந்தியா முழுவதிலுமாகப் பல்வேறு இடங்களிலும் அமைந்துள்ள பல 999 கல்வி நிலையங்களில் சுமார் 62,000 பேர்களுக்குத் தொழில் நுணுக்கப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் குறைந்த பட்சம் 582 தொழிற்சாலைகளிலாவது சுமார் 10,600 மாணவர்கள் பயிற்சியாளராக அமர்ந்து தொழில் நுணுக்கங்களை அறிந்து வருகிறார்களாம்!

# மாயூரத்தில் பொதுச் செயலாளர்

## மாபெரும் வரவேற்பும் — பொதுக் கூட்டமும்

21—9—55 காலை 8 மணியளவில் மாயூரம் வருகை தந்த பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை மாயூரம் சந்திப்புப் புகை வண்டி நிலையத்தில் ஏராளமான கழகத் தோழர்கள் மாலையிட்டு வரவேற்றனர். பின்னர், பொதுச் செயலாளர் அவர்கள் முசாபரி பங்களாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

**ஊர்வலம்**

மாலை 5 மணியளவில், முசாபரி பங்களாவிலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் பொதுச் செயலாளர் அவர்கள் குதிரைகள் பூட்டப்பட்ட சாரட்டில் அமர்த்தப்பட்டு, பொதுக் கூட்டம் நடைபெற்ற நகரப் பூங்காவிற்கு ஊர்வலமாக, தோழர் து. காசிநாதன் தலைமையில் அழைத்துச் செல்லப்பட்டார்.

தோழர்கள் கே. எம். சரீப், சந்தானம் ஆகியோர் குதிரைகள் மீது அமர்ந்து கழகக் கொடிகள் ஏந்தி, ஊர்வலத்தை ஒழுங்குபடுத்திச் சென்றனர்.

ஊர்வலத்தின்போது பொதுச் செயலாளருக்குக் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. நகரில் ஆங்காங்கே பல இடங்களில் பொதுச் செயலாளர் அவர்கள் கழகக் கொடியேற்றுவித்தார்.

ஊர்வலப் பாதை நெடுக பொதுச் செயலாளரை வரவேற்றும், கழகக் குறிக்கோளை நினைவுறுத்தியும், ஏராளமான வளைவு தட்டிகள் எழுதப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. நகர் முழுமையும் கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வழிநெடுக இனிப்புப் பண்டங்களும், குளிர்ப் பானங்களும் வழங்கப்பட்டன.

**பொதுக்கூட்டம்**

ஊர்வலம் மாலை 6-30 மணிக்கு, நகரப் பூங்காவை வந்தடைந்தது.

பின்னர் தோழர் பி. டி. ராசன் குழுவினரின் இசைவிருந்து நடைபெற்றது; தோழர் தீ. ப. நாதன் பொதுச் செயலாளரை வரவேற்றுப் பேசினார்.

தோழர் இரெ. ஜோசப் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் என். கிட்டப்பா சிறிது நேரம் பேசிய பின், பொதுச் செயலாளர் அவர்கள், வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும், நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தியும், இந்தி மொழி திணிப்பின் வகையினையும் விளக்கி; நீண்டதோர் உரை நிகழ்த்தினார்.

பொதுச் செயலாளருக்கு நகர தி. மு. கழகம், பாப்பா மார்க் கம்பெனி தொழிலாளர்கள், பித்தளை பாத்திர சங்கத்தினர் ஆகியவற்றின் சார்பில் வாழ்த்து மடல்களும் வழங்கப்பட்டன. மற்றும் உள்ளூர் வெளியூர் மன்றங்கள், படிப்பகங்கள், கிளைக் கழகங்கள், தனிப்பட்டோரின் சார்பிலும் ஏராளமான கைத்தறி ஆடைகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன. (ந-கி.)

# மக்களின் கருத்து அறியப்படுமாம்!

### வாழ்க்கை வசதிகள் பெற 6-வகைத் திட்டங்களாம்!

"இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஆணும் — பெண்ணும் உணவு, உடை, இல்லம், கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு ஆகிய இன்றியமையாத 6 வாழ்க்கை வசதிகளைப் பெறுவதற்கு வழிகோலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட நகல், மக்களின் கருத்தைத் தெரிந்து கொள்வதற்கு அனுப்பப்படும்," என்று, பிரதமர் பண்டித நேரு, கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# கப்பல் தொடர்பு நிறுத்தப்படும்

இந்தியாவில் போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள மர்ம கோவாவிற்கு தங்கள் கப்பல்கள் செல்லவேண்டாமென, ஜப்பான் கப்பல் 'கம்பெனி'கள் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஜப்பான் சர்க்கார் யோசனையின் பேரில், கப்பல் கம்பெனிகள் இந்தப் புதிய உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றனவாம்.

கோவாவுடன் தனது வர்த்தகத் தொடர்பு துண்டிக்கப்பட்டபோதிலும் கூட, இந்தியாவுடன் தான் கொண்டுள்ள வர்த்தகத் தொடர்பும், நல்லெண்ணமும் நீடிக்க வேண்டுமென ஜப்பான் விரும்புகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு என்று கூறப்படுகிறது.

பாண்டுங் மாநாட்டில் கலந்து கொண்ட ஜப்பான், காலனி ஆட்சியை எதிர்க்கிறது.

# வைகை மீது பாலம்

காசி—கன்னியாகுமரி தேசியப் பாதையில், மதுரைக்கு அருகில் வைகை நதிக்குக் குறுக்கே ஒரு புதிய பாலம் அமைப்பதற்கு இந்திய சர்க்கார் ரூ. 7,38,000 அனுமதித்துள்ளனர்.

இந்தப் பாலம், 27 அடி அகலமுள்ளதாகவும், இருபுறத்திலும் 5½ அடி அகலத்தில் நடைபாதை கொண்டதாகவும் அமையும். செலவுத் தொகை முழுவதையும் இந்திய சர்க்கார் ஏற்கும்.

### முதலாளித்துவ முறைக்கு

# சப்பைக்கட்டாம்!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், கலகலத்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவ முறைக்கு சப்பைக்கட்டு கட்டுவதாக இருக்கிறது,"

என்று, கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த எஸ். ஏ. டாங்கே, இந்தூரில் நடைபெற்ற அ. இ. தொழிற் சங்கக் காங்கிரஸ் கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடாதாம்!

### பாட்னாவில் அமைச்சர் டி. டி. கே.

பாட்னா, செப். 26—

உத்தேசிக்கப்பட்டுள்ள 4-வது எஃகுத் தொழிற்சாலையை பொக்காரோவில் நிறுவுவதற்கு வசதியுள்ளதாக அந்த இடத்தை இப்பொழுதிருந்தே அபிவிருத்தி செய்வதென்று மத்திய ஆட்சியினர் தீர்மானித்திருப்பதாக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி இங்கு கூறியுள்ளார்.

'எஃகுத் தொழிற்சாலைகள் ஏற்படுவதால், எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடாது,' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இந்தியருக்கு எதிராகப் பாரபட்சம் இல்லையாம்!

### அவ்வாறு கூறுவது தவறாம்!

"பர்மியர்—பர்மியரல்லாத நிலச்சுவான்தாரர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள், நிலமற்ற விவசாயக் குடும்பத்தினருக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது; இப்பிரச்சினையில், இந்தியருக்கு எதிராகப் பாரபட்சமாக நடந்துகொண்டதாகக் கூறப்படுவது தவறு; வினியோகம் செய்யப்பட்ட நிலத்தின் புள்ளிவிவரம் இன்னும்கிடைக்கவில்லை," என்று, ராஜ்யங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரிலுள்ள இந்திய டெலிபோன் தொழிற்சாலையில் 1956—57ல், 75,000 டெலிபோன்களும், 40,000 'எக்ஸ்சேஞ்சு' சாதனங்களும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

# கழகச் செய்திகள்

## இராமலிங்கபுரம் தி. மு. க. துவக்க விழா

20—9—55ல் மேற்படியூரில், தோழர் டி. கே. கே சாமி தலைமையில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் சி. பூச்சப்பனைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## அரசு நிலையம் தி. மு. க. துவக்க விழா

20—9—55ல், திருச்சி மாவட்டம்—அரசு நிலையம் தி. மு கழகத் துவக்க விழா நடைபெற்றது. அன்று மாலை 4 மணிக்கு ஊர்வலமும், 5 மணிக்கு செயலாளர் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எம் பழனியப்பன், எம். ஆறுமுகம், எஸ். ஆறுமுகம், எம். கே. பொன்னம்பலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் ஆர். கே. தங்கராசன் கொடி ஏற்றுவித்தார்.

## சலகண்டபுரம் தி. மு. க.

19—9—55 இரவு 8 மணிக்கு தோழர் அ. மு. அண்ணாமலை இல்லத்தில் தோழர் ர. அ. அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் விலகலை ஏற்றுக்கொண்டும், அவர்களுக்குப் பதிலாகத் தோழர்கள் அ. மு. அண்ணாமலை, பொ. லிங்கையன், ர. அ. அண்ணாமலை ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுத்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பம்பாய் — கோரேகானில் தி. மு. கழக அமைப்பு

ஆசியாவிலேயே முதல் தரப் பால் பண்ணையைக்கொண்ட பம்பாய் சுற்றுப்புறத்தில் உள்ள கோரேகானில் தி. மு. கழகக் கிளை ஒன்றினை நிறுவுவதற்குத் தற்காலிக அமைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கழகத் திறப்பு விழாவின்போது அக்குழு, நிரந்தர நிர்வாகக் குழுவாக அமைக்கப்படும். இவ்வமைப்புக் குழுவின் முதற்பெருங் கூட்டம், 2—10—55ல் பம்பாய் தி. மு. கழகச் செயலாளர் தலைமையில் நடைபெறும்.

## பம்பாய்—தாணா தி. மு. க.

19—9—55 காலை 10 மணிக்கு, தோழர் சங்கர் இல்லத்தில், தோழர் நம்பி நாராயணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், தோழர் எம். இராசகோபாலைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், திராவிடநாடு பிரிவினை பற்றி தோழர்கள் சண்முகராசன், டி. வி. சாரி, த. மு. பொற்கோ, எஸ் தியாகராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்ட இறுதியில் தாராவி தி. மு. கழகத் தோழர் கோதைராசன் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

# செய்திச் சுருள்

★

## சி. எம். எஸ். நினைவு மன்றம்

18—9—55 காலை 10 மணிக்கு திருப்பத்தூர் (வ. ஆ.) சின்னக்கடைத் தெருவிலுள்ள மேற்படி மன்றத் துவக்கவிழா தோழர் எம். நடேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆர். எஸ். மணி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் க. நெடுஞ்சோழன் அவர்கள் விழாவை துவக்கி வைத்து உரையாற்றினார். மற்றும் தோழர்கள் கே. தாசரதி, கே. இருசன் ஆகியோர் பேசியபின் தோழர் சி. பி. சிற்றரசு அரியதோர் உரை நிகழ்த்தி, திரு. சி. எம். சுப்பிரமணியன் படத்தைத் திறந்துவைத்தார்.

## சென்னை அறிவியக்க மன்றம்

18—9—55-ல், சென்னை பூங்கா நகர் அனுமந்தராயன் கோயில் தெரு, 32-ம் எண்ணுள்ள இல்லத்தில், மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டம் தோழர் பிரகாசம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் அன்புமணி, பாப்பையா, மற்றும் பலர் மன்றத்தின் பணி குறித்தும், கொள்கை குறித்தும் பேசினர். பின்னர், தோழர்கள் பரமானந்தம், ஆ. ருக்மாங்கதன், ஆகியோரை முறையே தலைவராகவும், செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## சென்னை மாணவர் மன்றம்

மேற்படி மன்றச் சார்பில் நடைபெறும் கதை, கட்டுரை, கையெழுத்து முதலிய போட்டிகளுக்குக் கட்டணம், விண்ணப்பம் முதலியன அனுப்பிவைக்க வேண்டிய இறுதிநாள், பலர் வேண்டுகோளின்படி 16—10—55 வரை நீடிக்கப்பட்டுள்ளது. 28—10—55க்குள் கதை, கட்டுரை, கையெழுத்து முதலியவைகளை அனுப்பிவைக்கலாம் என்று அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

## முடிதிருத்தத் தொழிலாளர் சங்கம்

17—9—55 மாலை 4 மணியளவில் சிதம்பரம் லால்பேட்டை சாலைத் தெருவில் அமைந்துள்ள முடி திருத்தும் தொழிலாளர் சங்கப் புதிய கட்டிடத் துவக்க விழா தோழர் சடையப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ந. ப குப்புசாமி, ந. ராகவன், வே. கலியபெருமாள் ஆகியோர் 'சமூகக் கட்டுப்பாடும், ஒற்றுமையும்' என்பது பற்றிப் பேசினர். பின்னர், தோழர்கள் தி இராமசாமி, ந ப. குப்புசாமி ஆகியோரை முறையே தலைவராகவும் செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## மதுரை வேலாயுதம் நினைவுப் படிப்பகம்

20—9—55 காலை 10 மணிக்கு, மதுரை அழகரடி உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் நினைவுப் படிப்பகச் செயற்குழுக் கூட்டம் சி. கணபதிசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது, கோவா அடக்குமுறையைக் கண்டித்தும், மற்றும் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## தமிழ் இளைஞர் படிப்பகம்

18—9—55 காலை 8½ மணிக்கு, திருச்சி - சுப்பிரமணியபுரத்தில், தோழர் ஆண்ட்ரூஸ் தலைமையில் தமிழ் இளைஞர் படிப்பக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் சாமிநாதன், இரெ. வேலழகன் ஆகியோரை முறையே தலைவராகவும், செயலாளராகவும் கொண்ட படிப்பக நிர்வாகக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், அடுத்த திங்கள் 2-ந் தேதியன்று, படிப்பகத் துவக்க விழாவை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# திரு. வி. க. நினைவுநாள்

22—9—55 மாலை சென்னை ஒய். எம். சி. ஏ. மண்டபத்தில், சென்னை தபால்-தந்தி ஊழியர்களின் அமைப்பான கலைஞர் மன்றச் சார்பில், மன்றத் துவக்க விழாவும், திரு. வி. க. நினைவு நாளும், தோழர் சி. எம். பரிபூரணம் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. ஜி. எஸ் சுந்தரம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு. பி. வரதராஜு எம். எல். ஏ., அவர்கள் மன்றத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், எல்லாத் துறையிலும் தமிழ்க் கலை வளரப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பின்னர் தோழர்கள் டி. எஸ் இராமானுசம், ஜி. இலக்குமணன், எம். சாமிராமன், ஏ. எஸ். இராகவன், ஆர். இரத்தினசபாபதி ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தமிழ்க் கலை பற்றியும், கலை, கலைக்காக என்றிருக்காமல் மக்கள் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பயன்படச் செய்வதில் அனைவருடைய உழைப்பையும் குறித்து சொற்பொழிவாற்றினார்.

## பாரதி விழா

அந்தமான் — போர்ட்பிளேரில், 11—9—55 மாலை 5 மணிக்கு, தமிழர் சங்கத்தின் சார்பில், அரசாங்க உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில், திரு. பி. சுந்தரமூர்த்தி (நிதி இலாகா அதிகாரி) தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வீரராகவன், சேஜாகர், வி. சதாசிவம் ஆகியோர் பாரதியார் பற்றிச் சொற்பொழிவாற்றினர். பின்னர், பாரதியாரைப் பற்றிய கவிதைப் போட்டி ஒன்றும் நடந்தது. அப்போட்டியில் எட்டுப் பேர்கள் கலந்து கொண்டனர். தோழர்கள் வினைதீர்த்தான், வி. மூர்த்தி, சு. ப. பொன்னுச்சாமி ஆகியோர் முறையே முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளைப் பெற்றனர். விழாத் தலைவர் பரிசுகளை வழங்கினார். (ந-கி)

ஃ ஃ ஃ

18—9—55 காலை 10 மணியளவில், கொழும்பு எண். 75/4, சிந்தப்பிட்டித் தெருவிலுள்ள முத்தமிழ் மன்றத்தின் சார்பில், மன்றப் பணிமனையில், தோழர் ஜெ. சோமசுந்தரம் தலைமையில் பாரதியார் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் கெ. ஜி. பாலன், தி. இளங்கதிர், பி. எம். ஜலால், சுப்பையா, தமிழ்நாதன், பா. ச. சிதம், டி. எம். பீர்முகம்மது ஆகியோர் பேசியபின், தோழர் இரா. அதிமணி பாரதியார் படத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார். அடுத்துத் தோழர் பொ. தொல்காப்பியனும் சொற்பொழிவாற்றினார்.

## திருக்குறள் வகுப்பும் — நினைவுக் கூட்டமும்

24—9—55 பிற்பகல், சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகச் சார்பில் திருக்குறள் வகுப்பு நடைபெற்றது. பின்னர், திரு. இராஜாராம் மோகன்ராய் நினைவு நாள் பொதுக்கூட்டம் திரு. மயிலை சிவமுத்து தலைமையில் நிகழ்ந்தது. திரு. வல்லை பாலசுப்பிரமணியம் இராஜா ராம் மோகன்ராய் வாழ்க்கை வரலாற்றைக் கூறினார். தொடர்ந்து தோழியர் வ பா. தாமரைக்கண்ணி அம்மையார், பார்வதி அம்மையார், டபிள்யு. என். ஜெயகுமாரி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## சொற் பயிற்சிக் கூட்டம்

18—9—55 காலை 8½ மணியளவில், சென்னை 31-வது வட்டம் அழகிரி நினைவு மன்றத்தில், தோழர் தீனன் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக்கூட்டத்தில், 'குறள்' எனுந்தலைப்பில் தோழர்கள் இரா. சேரன், ப. குருமூர்த்தி, கருணாகரப்பாண்டியன், த. மணி, துரைராஜ், செல்வம், அ. பாண்டியன், சேரலாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

# சென்னை நகரசபைத் தேர்தல்கள்

## குறைந்த வாக்குப் பதிவு தரும் ஏமாற்றமும், குழப்பமும்

சென்னை, செப். 27—

சென்னை நகர சபைத் தேர்தல் முடிவுகள் நேற்றுமுதல் வெளியாகிக்கொண்டு வருகின்றன.

அபேட்சகர்களின் சின்னங்கள் மீது கோடிட்டு, மக்கள் வாக்குரிமை அளிப்பது சென்னை நகரில் இதுவே முதன் முறையாதலால், செல்லாத வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. பல 'வாக்குரிமைச் சீட்டு'களில், பல இடங்களிலும் கோடுகள் போடப்பட்டிருந்தன; பலவற்றில், கோடுகளே காணப்படவில்லை.

தேர்தலில் யார் யார் வெற்றி பெற்றார்கள் என்பதைக் காட்டிலும், அந்தந்தத் தொகுதிகளில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையைக் காண்பதிலேயே மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

நேற்று வரையில் வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளில், அந்தந்தத் தொகுதிகளின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையையும், பதிவாகியுள்ள வாக்குகளின் எண்ணிக்கையையும் கண்ணுற்ற சென்னை நகர மக்கள் பெரிதும் திடுக்கிட்டுவிட்டனர் என்றே கூறலாம்; செல்லாத 'ஓட்டு'களின் எண்ணிக்கையின் உச்சநிலைவேறு எல்லோரையும் 'குழப்ப'த்தில் ஆழ்த்தியுள்ளது. அதன் விவரங்கள் இங்கு தரப்படுகிறது:—

**1. புது வண்ணாரப்பேட்டை**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 16,530 |
| பதிவானது | 7,293 |
| செல்லாதவை | 291 |

**2. இராயபுரம்**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 12,137 |
| பதிவானது | 6,305 |
| செல்லாதவை | 296 |

**3. சிங்காரத்தோட்டம்**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 27,155 |
| பதிவானது | 11,231 |
| செல்லாதவை | 579 |

**4. சஞ்சீவிராயன் பேட்டை**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 33,541 |
| பதிவானது | 11,890 |
| செல்லாதவை | 582 |

**5. கொருக்குப்பேட்டை**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 24,085 |
| பதிவானது | 8,209 |
| செல்லாதவை | 476 |

**6. வியாசர்பாடி**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 15,367 |
| பதிவானது | 7,062 |
| செல்லாதவை | 479 |

**7. பேசின் பிரிட்ஜ்**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 14,358 |
| பதிவானது | 6,701 |
| செல்லாதவை | 415 |

**8. பெத்துநாய்க்கன்பேட்டை**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 18,173 |
| பதிவானது | 7,814 |
| செல்லாதவை | 350 |

**9. ஏழுகிணறு**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 15,303 |
| பதிவானது | 7,118 |
| செல்லாதவை | 288 |

**10. அம்மன்கோவில்**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 14,295 |
| பதிவானது | 6,464 |
| செல்லாதவை | 444 |

**11. முத்தியாலுப்பேட்டை**

வாக்குப் பதிவு இருக்கவில்லை. பொதுத் தொகுதி, பெண் தொகுதிக்கான இரு அபேட்சகர்களும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

**12. துறைமுகம்**

| | |
|---|---|
| வாக்காளர்கள் | 13,000 |
| பதிவானது | 4,358 |
| செல்லாதவை | 308 |

## 'பொம்மை சுல்தான்'

### பதவியினின்றும் விலகுவதற்கு மறுப்பு!

மொராக்கோ அரசியல் நிலை

ராபட், செப். 26—

பிரெஞ்சுக்காரர்களின் கைப்பொம்மையாக விளங்கி வரும் மொராக்கோ சுல்தான் முகம்மது பென் மௌலே அரபா, பிரெஞ்சுக்காரர்கள் வற்புறுத்திய பின்னருங்கூட சிம்மாசனத்தை விட்டு இறங்க மறுத்து வருகிறாராம்.

இவர், மொராக்கோவின் சுல்தானை முகம்மது பென் யூசுப், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளால் பதவி பறிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டபோது, அதே பிரெஞ்சுக்காரர்களால் சுல்தானாக்கப்பட்டவர்.

சுதந்திரம் கோரும் மொராக்கோ தேசியவாதிகள், முதலில் இந்தப் 'பொம்மை சுல்தானை' கீழிறக்கிவிட்டு, பென் யூசுபை சுல்தானாக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகள் கேட்டுக்கொண்ட பிறகும், குடியேற்றக்காரர்கள், 'மொராக்கோவில் எந்தவித மாற்றமும் தேவையில்லை,' என்று கூறுவதை அவர் எடுத்துக்காட்டி, சிம்மாசனத்தைவிட்டு இறங்க மறுக்கிறாராம்!

பலாத்காரமாக அவரை கீழிறக்கினாலன்றி அவராகவே கீழிறங்க மாட்டார் என்று தெரியவருகிறது.

இவரது பிடிவாத முடிவின் விளைவாக, நாடு முழுவதுமாக ஒரு பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட தேசியவாதிகள் ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

## பொய் வதந்தி பரப்பியவர் கைது!

செகந்திராபாத், செப். 26—

தன்னுடைய மகள் ஆணாக மாறிவிட்டதாகப் பொய் வதந்தியைப் பரப்பிய குற்றத்திற்காக, சந்தன்முல் முந்தாதா என்பவர், ஐதராபாத் போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

போலீஸ் மருத்துவ மனையில் பரிசோதனை நடத்திய பின்னர், அவருடைய மகள் ஆணாக மாறவில்லை என்று டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்த பின்னர்தான், அவர் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுதலையாகியுள்ளார்.

## கைதியைத் துன்புறுத்திக் கொன்ற வழக்கு

### சப்-இன்ஸ்பெக்டர் மீது குற்றச்சாட்டு

பம்பாய், செப் 26—

சென்ற நவம்பரில், ஒரு தெருச் சண்டை பற்றி கைது செய்யப்பட்ட துளசிராம் ஆனந்த் என்பவரை, தாதர் 'லாக்கப்'பில் அடித்துத் துன்புறுத்தியதினால் காயமடைந்து அவர் மாண்டுவிட்டதாக போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் அத்வானி மீது தொடரப்பட்ட வழக்கில், 'எதிரி குற்றவாளியே' என்று ஜூரிகள் ஏகமனதாகத் தீர்ப்பளித்துள்ளனர். அதிகாரிகளுக்கு, இதுபற்றிய ஒரு அறிக்கையை கோர்ட்டார் அனுப்பிவைக்கக் கூடும்

தி. மு. க. பொதுச்செயலாளர்

## நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

செப். 27: குடியேற்றம்
மாலை 5 மணி: நகர சபை வரவேற்பு;
மாலை 6 மணி: பொதுக் கூட்டம்.

28: ஆண்டிமடம் (தெ.ஆ.) கைத்தறியாளர் சங்க ஆண்டு விழா.

### சம்பத் சொற்பொழிவு

28—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை — கொருக்குப்பேட்டை, எண் 2, துளசிங்க கிராமணி தெருவில், சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சென்னை கோகலே மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒலிபரப்பப்படும்.

### பரிசீலனை செய்கின்றனர்?

புதுடில்லி, செப் 26—

"சென்னை—திருச்சி—மதுரை—திரு-கொச்சிக்கு விமானப் போக்கு-வரத்து நடத்துவது பற்றி இந்திய விமானக் கார்ப்பொரேஷன் தற்சமயம் பரிசீலனை செய்து வருகிறது," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

### நடைமுறைக்கு ஏற்றதல்ல: காமராசர் கருத்து

சென்னை, ஆக. 24—

"தட்சிணப் பிரதேச அமைப்பு என்பது நடைமுறைக்கு ஏற்றதல்ல; அதை தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என்று சென்னை முதலமைச்சர் காமராசர் கருத்தறிவித்துள்ளாராம்.

### திட்டத்தின் விளைவுகள் தெரிந்த பின்புதானும்!

சென்னை, செப். 25—

"சென்னை மாநிலத்தில், இரும்பு உற்பத்தித் தொழில் சம்பந்தமாக மாநில அரசாங்கம் மத்திய ஆட்சிக்கு எழுதியது; 'நெய்வேலி பழுப்பு நிலக்கரியின் பரீட்சார்த்தத் திட்டத்தின் விளைவுகள் தெரிந்த பின்னர்தான் இதுபற்றி முடிவு செய்யப்படும்' என்று மத்திய ஆட்சிப்பீடம் கூறிவிட்டது," என்று விவசாய அமைச்சர் சட்டசபையில் கூறியுள்ளார்.

# 'இந்தி மொழியில் பரீட்சை வேண்டாம்'

## 'வட்டார மொழிகளே போதனை மொழிகளாக வேண்டும்'

அமைச்சர் சுப்பிரமணியம் கருத்து

சென்னை செப் 25—

"இந்தி மொழியை புகுத்துவது, வட்டார மொழிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்றெண்ணுவோரின் அச்சத்தைப் போக்க முதலில் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்; இதற்குச் சிறந்தவழி, வட்டார மொழிகளை, துவக்க நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரி வரை போதனா மொழியாக்க வேண்டும்;

"முதலில் புரிந்துகொள்ளவேண்டும்—இந்தி மட்டுமல்ல, இந்தியாவின் தேசிய மொழி என்பதை! அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 14 மொழிகளுள் அதுவும் ஒன்று;

"மத்திய அரசாங்க நிர்வாக மொழியாக இருப்பதற்கு, இந்தி, இந்தியாவின் இதர மொழிகளைக் காட்டிலும் அதிகமான பேர்களுக்குப் புரியும் என்பதால், தேர்ந்தெடுக்கப்பட்டது; இப்படி அலுவல் மொழியாக இந்தியை மேற்கொள்ளுவதற்கு 15 ஆண்டுகள் காலம் தரப்பட்டிருக்கிறது; இப்போது, 'இந்த 15 ஆண்டுக் காலம் போதுமா' என்று பலரால் அஞ்சப்படுகிறது; இந்த அச்சம், யாரோ சிலரால் எழுப்பப்படுவதல்ல; நிர்வாகத் துறையில் நல்ல அனுபவம் கொண்டவர்களால் எழுப்பப்படுகிறது என்பதால் அது குறித்துக் கவலைப்படாமல் இருக்க முடியாது;

"மத்திய சர்க்கார் நடத்தும் பரீட்சைகளைப் பொறுத்தவரையில் 'அலைவ இந்தி மொழியிலேயே விடையளிக்கப்பட வேண்டும்'—என்று விதிக்கப்படுமானால், இந்தி மொழி வழங்காத இதர மொழி வழங்கும் பகுதியினர், தங்களுக்கு அதனால் பிரதிகூலம் ஏற்படும் என்று அஞ்சுவது இயற்கையே; 'இந்த அச்சம், ஆதாரமற்றது,' என்று நிச்சயம் கூறமுடியாது;

"போட்டிப் பரீட்சைகள் இந்தியில் நடத்தப்படுவது, இந்தி பேசாத இதரர்களுக்குக் கஷ்டமானதுதான்; எனவே எனது சொந்தக் கருத்தெல்லாம், 'எல்லாவட்டார மொழிகளிலும் இந்தப் பரீட்சைகளை நடத்தலாம்—இது சாத்தியமானது,' என்பதோடன்றி, 'எல்லோருக்கும் திருப்திதரக் கூடியது; எல்லா மாநிலங்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு கொள்கையை உருவாக்க உதவக் கூடியது,' என்பதுதான்;

"பிற்காலத்தில் உத்தியோக உயர்வுக்கும் புதிய உத்தியோகங்களுக்கும், இந்தி மொழி அவசியம்—என்று கருதப்படுமானால், நிச்சயம், தாங்களாகவே முன்வந்து இந்தி மொழியைக் கற்றுக்கொள்வர் — பரீட்சைகளில் தேறுவோர்,"

என்று, சென்னை நிதிமந்திரி சுப்பிரமணியம், இந்தி பிரச்சாரகர்கள் மாநாடு ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

### அமெரிக்கத் தலைவரின் உடல் நலம்

திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பினால் உடல் நலங்குன்றிய அமெரிக்கத் தலைவர் ஐசனோவரை நான்கு பிரபல டாக்டர்கள் பரிசோதனை செய்து, அவருடைய இருதயத்திலுள்ள இரத்தக் குழாயில் இரத்தம் இறுகியதால் மாரடைப்பு ஏற்பட்டதென்றும், இப்போது நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்றும் அறிவித்துள்ளனர்.

## நடிகையிடமிருந்து

### ரூபாய் நோட்டுகள் பறிமுதல்

பம்பாய், செப். 26—

கராச்சி வழியாக லண்டன் செல்லவிருந்த ரஹீம் என்ற நடிகை, பம்பாய் விமான நிலைய சுங்க அதிகாரிகளின் சோதனையால், பயணத்தை ரத்து செய்ய வேண்டி வந்துள்ளதாகத் தெரிகிறது.

எடுத்துச் செல்வதாக அறிவித்திருந்ததைக் காட்டிலும் அதிகமான பணம் அவர் வைத்திருந்தாராம். அவரிடமிருந்த 2,000 ரூபாயையும், மற்றும், மதிப்பிட வேண்டும் என்பதற்காக அவர் வைத்திருந்த நகைகளையும் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனராம்.

## 33,000 ஏகர் நிலம்

### 7,000 குடும்பங்களுக்குத் தரப்பட்டதாம்!

'பூமி தான' நிலம் பகிர்வு

ஐதராபாத், செப். 25—

"'பூமி தான'த்தின் மூலம் பெறப்பட்ட சுமார் 33,000 ஏகர் நிலம், ஐதராபாத் பூமி தான இயக்கத்தவரால் சுமார் 7,000 குடும்பங்களுக்குப் பிரித்துத் தரப்பட்டிருக்கிறது,"

என்று, முதன் மந்திரி இராமகிருஷ்ண ராவ் தெரிவித்திருக்கிறார்.

"மூன்றாண்டுகளுக்குப் பிறகு 'பூமி தான' நிலம் பெற்றவர்களுக்கு நிலவரி விதிப்பினின்றும் விலக்களிக்கப்படும்"

என்றும், அவர் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

## திருமாறன் — பத்மா

சிதம்பரம் மு. கல்யாணசுந்தரம் அவர்களின் மகன் புலவர் க. திருமாறன் அவர்களும், அ. சுப்பையா அவர்களின் மகள் பத்மா அவர்களும், 12-9-55 காலை, டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் திருமணம் செய்துகொண்டகாலை எடுக்கப்பட்டது இப்படம்.

★

### நன்றி

12—9—55 காலை சென்னையில் நிகழ்ந்த எங்கள் திருமணத்திற்குத் தலைமை தாங்கிய டாக்டர் மு. வரதராசனார், வாழ்த்துரை வழங்கிய பெருமக்களான, அறிஞர் அண்ணா, சி. அமிர்த கணேசன், அ. பொன்னம்பலனார், சி. சுப்பையா, புலவர் ந. சேதுரகுநாதன், எம். கே. சண்முகம், கா. அப்பாதுரை, மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், என். ஆர். சடகோபன் ஆகியோருக்கும், வாழ்த்திதழ் படித்துத் தந்த நண்பர்கட்கும், வந்திருந்து சிறப்பித்த பெரியோர்கட்கும், தாய்மார்கட்கும், வாழ்த்துச் செய்தி அனுப்பி மகிழ்வித்தவர்கட்கும் எங்கள் உளம் கனிந்த, உவகை நிறைந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.

—திருமாறன்-பத்மா

## சேரிகள் ஒழிப்புக்கு மானியம் தரப்படும்?

### நகர சுத்தியாளருக்குக் குடியிருப்பு வசதி?

பரிசீலனை செய்யப்படுகிறதாம்!

புதுடில்லி, செப். 26—

"இரண்டாவது திட்டத்தில், நகர சுத்தியாளருக்குக் குடியிருப்பு வசதிக்கு வீடுகள் கட்டித் தருவது சம்பந்தமான திட்டங்கள் பரிசீலனை செய்யப்படுகிறது," என்றும், 'அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவது பற்றி மாநில சர்க்கார்களிடமிருந்து திட்டங்கள் கோரப்படவில்லை' என்றும், 'சேரி ஒழிப்புத் திட்டத்திற்கு மானியம் அளிப்பது பற்றிய பிரச்சினை இன்னும் பரிசீலனையில் இருக்கிறது,' என்றும், மக்கள் சபையில் சர்தார் சுவரண் சிங் அறிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். எம் ஏ.